16.09.2025

**அ.வ.எண். 1071/2017 C/w.8/2021 and C/w 160/2021**

**பி.சா.2 - கோவிந்தசாமி, த/பெ. கிருஷ்ணசாமி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.09.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. ராமசாமி கவுண்டருக்கு இரு வாரிசுகள் என்றும் அதில் ரங்கசாமி இறந்துவிட்டார் என்றும், மற்றொருவர் 1ம் வாதி மனோகரன் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் மகள் 2ம் வாதி துளசிமணி என்றால் சரிதான். 3 மற்றும் 4ம் வாதிகள் இறந்துபோன ரங்கசாமியின் வாரிசுகள் என்றால் தெரியாது. எழுதியதாக சொல்லப்படும் பி.சா.ஆ.7 உயில் ஆவணம் எந்த ஆவணத்தின் அடிப்டையில் எழுதப்பட்டது என்றால் 3810/1914 ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது. 3810/1914 ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என பி.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. பிதுரார்ஜித வகை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அது எந்த வகையான ஆவணம் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.7 உயில் ஆவணத்தில், மாரப்ப கவுண்டருக்கு ஒரே மகன் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். பி.சா.ஆ.7 உயில் ஆவணம் எழுதியதாக சொல்லும் மாரப்ப கவுண்டருக்கு 1. ராக்கிய கவுண்டர், 2. ரங்கசாமி, 3. கந்தசாமி, 4. ஆறுச்சாமி, மகள்களான 5. பழனியம்மாள் 6. லட்சமி ஆகியோர் வாரிசுகள் என்றால் இல்லை. பி.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் மேற்படி நபர்கள் வாரிசு என ஒப்புகொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. பி.சா.ஆ.7 உயில் ஆவணத்தில், மற்றொரு சாட்சியான ரங்கசாமி என்பவர் மாரப்ப கவுண்டரின் மகன் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கு மகன்கள் மற்றும் மகள்கள் உள்ள நிலையில் பேரப்பிள்ளைகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைக்க காரணம் என்ன என்று கேட்டேனா என்றால் கந்தசாமி மற்றும் ரங்கசாமி நன்றாக பார்த்து கொள்வதால் அவர்களுக்கு எழுதி வைப்பதாக சொன்னார்.

நோட்டரி அலுவலகத்திற்கு மாரப்ப கவுண்டரை அழைத்து கொண்டு பேருந்தில் சென்றோம். பிரமாண வாக்குமூலத்தில் காரில் அழைத்து சென்றதாக சொல்வது பொய் என்றால் காரில் அழைத்து செல்லவில்லை. நோட்டரி வழக்கறிஞரிடம் நான் ரங்கசாமியின் மகன்களுக்கு உயில் ஆவணம் எழுதி வைப்பதாக சொன்னேனா என்றால் மாரப்ப கவுண்டர் தான் சொன்னார்.

4. உயில் சாசனத்தை யார் தயாரித்தவர் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் யார் தட்டச்சு செய்தார் என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நோட்டரி வழக்கறிஞர் முன்பாக மாரப்ப கவுண்டரும், மற்ற சாட்சிகளும் கையொப்பம் செய்ததாக ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நோட்டரி வழக்கறிஞர் அவரது பதிவேட்டில் பதிவு செய்து கொண்டதாக ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் தான் உயில் ஆவணம் எழுதி தயார் செய்யப்பட்டு, கையொப்பம் இடப்பட்டது என்பது சம்மந்தமான விவரம் குறிப்பிடாததால் மேற்படி உயில் ஆவணம் சட்டப்படியான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

5. மாரப்ப கவுண்டர் பிதுரார்ஜித சொத்து என சொல்லியுள்ள நிலையில் உயில் ஆவணத்தை எழுத அவருக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் சொத்துக்கள் மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட நிலையில் அவர் எந்தவகையான ஆவணம் மூலம் உரிமை கொண்டு அனுபவம் செய்து வந்தார் என்ற விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் சர்வே எண்.614/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.614/1 E என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுதி வைத்ததாக சொல்லும் மாரப்ப கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டரும், பெரியாக் கவுண்டரின் மகனான மாரப்ப கவுண்டரும் வெவ்வேறு நபர்கள் என்றால் பெரியாக் கவுண்டரின் மகன் இளைய மாரப்ப கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டர் எழுதி வைத்தார்.

6. உயில் ஆவணம் எழுதி வைத்ததாக சொல்லும் மாரப்ப கவுண்டர் 14.09.1997 ல் இறந்துவிட்டார். 1997 ம் ஆண்டு முதல் இந்த வழக்கு தாக்கல் செய்யும்

வரை உயில் சம்மந்தப்பட்ட வழக்கு நடைபெற்றது பற்றி தெரியுமா என்றால் நினைவில்லை. உண்மையிலேயே மாரப்ப கவுண்டர் மகன் மாரப்ப கவுண்டரால் உயில் சாசனம் எழுதப்பட்டிருந்தால் எந்த ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்றும், அவரது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றும், அந்த சொத்தின் உட்பிரிவு குறிப்பிட்டு எழுதியிருப்பார் என்றால் சரியல்ல. உயில் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள மற்ற வாரிசுதாரர்கள் பிதுரார்ஜித வகை என்று குறிப்பிட்டுள்ளதால் அது மற்ற வாரிசுகளுக்கும் உரிமை இருப்பதால் மாரப்ப கவுண்டர் உயில் ஆவணத்தை எழுதி வைக்க அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அவருக்கு உரிமை உள்ளது.

7. மேற்படி உயில் ஆவணம் சட்டப்படியான ஆவணம் அல்ல என்றும், இது வழக்கிற்காக பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுகொள்ளகூடாது என்றால் சரியல்ல.

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்பபடுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur